


<u>நகர் ஊரமைப்புத்துறை -அரியலு</u>

<u>ஆண்டிமடம் ஊராட்சி ஒ</u>

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், ஆத்துக்குறிச்சி உ /16B2A -ல்
அமையும் உத்தேச இட அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வ

| | | |
|---|---|---|
| அளவு | - | 1:100 |
| கோப்பு எண் | - | 291/2024 அ.மா |
| இணையதள எண் | - | TQTSX8UZ / 23917/TCP/2024 |

வ

## குறிப்பு :

1. இட அமைப்பின் மொத்தப்பரப்பு : 16 சென்ட்
2. இட அமைப்பின் எல்லை -
3. நிலையிலுள்ள சாலை -

இட அமைப்பின் எல்லை : ABCDEF

## நிபந்தனைகள் :-

1. இட அமைப்புக்கு (SITE APPROVAL) உள்ளாட்சி இறுதி ஒப்பதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும். எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வெண்டும்.
2. அரசாணை எண்.181 ஊரக வளர்ச்சித்துறை நாள் 19.12.2020 - ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பெயரில் இந்த இட அமைப்பிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், இட அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதெனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த இடத்திற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குனர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் ( கிரையபத்திரம் / குத்தகை பத்திரம்/ பட்டா/ தானபத்திரம்/ போது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
5. உத்தேச இட அமைப்பு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதெனும் நிலையில் இருப்பின் இத்துறையின் இட அமைப்பு அனுமதி செல்லத்தக்கதல்ல.
6. உத்தேச இட அமைப்பின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
7. உத்தேச இட அமைப்பின் ஊடே POWER LINE, HT LINE, LT LINE, AND TELEPHONE LINE ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
8. உத்தேச இட அமைப்பில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச இட அமைப்பில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வெண்டும்.
10. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) இட அமைப்பு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
11. அரசாணை எண்.18 (ம) 16 ந.நி (ம) கு.வ.து. நாள் 04.02.2019 (ம) 31.01.2020 -ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.

மா .வ /ந. ஊ. உ. இ (அ.மா) எண்: 09/2024

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Ariyalur
Date:2024.06.04 10:3?:38

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
அரியலூர் மாவட்டம்.